திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின்
செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்: திரு.ச.முத்திளங்கோவன்,

ந.க.எண்.ஈ3/1686/2019 நாள்:18.09.2019.

பொருள்: பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - திருநெல்வேலி மாவட்டம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பணிக்கு 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ம் ஆண்டுக்கு இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடல்.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் ந.க.எண்.910/PSD-C3/2019 நாள்:13.02.2019.
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறை ஆணை நாள்:22.02.2019.
3. சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து வரப்பெற்ற பிரேரணைகள்.

******

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ம் ஆண்டு நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பணிக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் போட்டி தேர்வின் மூலம் இளநிலை உதவியாளர்களாக தேர்வு செய்யப்பட்டு, பார்வை (1)-ல் காணும் கடிதத்தின்படி திருநெல்வேலி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 7 நபர்களுக்கு பார்வை (2)-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி திருநெல்வேலி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் இளநிலை உதவியாளர் நிலையில் பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

எனவே, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ம் ஆண்டு போட்டித் தேர்வின் மூலம் இளநிலை உதவியாளர்களாக தேர்வு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி IV-ன் கீழ் 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ம் ஆண்டு நேரடி நியமனம் தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடரப்பட்டுள்ள நிலுவை வழக்குகளின் முடிவுகளுக்கு உட்பட்டதாகும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் கீழ்குறிப்பிட்டுள்ள ஏழு பணியாளர்களுக்கு அவர்களுக்கெதிரே கலம் எண். 4-ல் குறிப்பிட்டவாறு இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து இதன்வழி ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்கள்) | பணியேற்பு தேதி | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | கா.உதுமான் மைதீன்,<br>இளநிலை உதவியாளர்,<br>பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம். | 01.03.2019 மு.ப | 01.03.2019 மு.ப |
| 2. | A.பாலசுப்பிரமணியன்,<br>இளநிலை உதவியாளர்,<br>மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சி பிரிவு)<br>திருநெல்வேலி. | 06.03.2019 மு.ப | 06.03.2019 மு.ப |
| 3. | K.முத்துமாரி,<br>இளநிலை உதவியாள்ர்,<br>கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம். | 28.02.2019 மு.ப | 28.02.2019 மு.ப |
| 4. | S.ராமசுப்பு,<br>இளநிலை உதவியாளர்,<br>குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம். | 01.03.2019 மு.ப | 01.03.2019 மு.ப |
| 5. | A.முத்துகுமார்,<br>இளநிலை உதவியாளர்,<br>மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சி பிரிவு)<br>திருநெல்வேலி. | 28.03.2019 மு.ப | 28.03.2019 மு.ப |
| 6. | N.பொன்தபித்தாள்,<br>இளநிலை உதவியாளர்,<br>கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம். | 28.02.2019 மு.ப | 28.02.2019 மு.ப |
| 7. | A.இருதயராஜ்,<br>ஊர்நல அலுவலர் நிலை-2<br>ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம். | 01.03.2019 மு.ப | 01.03.2019 மு.ப |

பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம் தனியர்களின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டது எனச் சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (வளர்ச்சி),
திருநெல்வேலி.

18/09/19

பெறுநர்:

சம்பந்தப்பட்ட பணியாளர்கள் (உரிய வழியாக)

நகல்:

1) வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ)/(கி.ஊ), பாளையங்கோட்டை கடையநல்லூர்,குருவிகுளம், கீழப்பாவூர் மற்றும் ஆலங்குளம்.
2) இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை-15 - சமர்ப்பிக்கப்படுகிறது.
3) செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 - சமர்ப்பிக்கப்படுகிறது.
4) ந3/ந10 பிரிவிற்கு.